சிவமயம்

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON
RP. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௩௬] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஆு மாசி மீ உஉ (1948 மார்ச்சு 5 வெள்ளிக்கிழமை) [இல ௧௦

## சாதனங்களுக்கு உயிராயுள்ளது திருவருள்

"எல்லாவகையு மியம்பு மிவனகன்று நில்லா வகையை நினைந்து."

ஆன்மாவானது சிவசத்தியினின்றும் ஒரு காலமும் நீங்கி நில்லாத தன்மையையறிந்து ஆன்மா முத்தியடைதற்கு ஏதுவாகியவழிகள் எல்லாவற்றையும் வேதாகமங்கள் சொல்லும்.

திருவருளே ஆன்மாவுக்கு என்றுந் துணையா யுள்ளமையால் அது தாயாக உபசரிக்கப்பட்டு உமாதேவி எனப்படும். முத்திக்குரிய சாதனங்களெல்லாம் ஆன்மா திருவருளை நுகரும் வழிகளன்றித் தாமே முத்தியைக் கொடுக்கவல்லனவல்ல. ஆற்றங் கரையிலிருந்து விளைநிலத்துக்கு வாய்க்கால் வெட்டிவிடுவதால் மாத்திரம் பயிர் உண்டாகாது; ஆற்றின் மடையைத் திறந்து தண்ணீரைப் போக்கவே பயிர் உண்டாகும். அதுபோல வேதாகமங்களிலே விதிக்கப்பட்ட வழிகளாலே திருவருளைப்பெறுதல்மாத்திரம் முத்தி கைகூடும். திருவருளாகிய ஆற்றின் மடையைத் திறப்பன சிரத்தையும் அன்புமாம். சிரத்தையு மன்புமின்றிச் சமயாநுஷ்டானங்களைச் செய்பவர் பேற்றைப் பெறமாட்டார். ஆதலால் அவைகள் முத்தி பெறுதற்கு இன்றியமையாத துணைகளாம். சிவன் முத்தருக்கு வேண்டிய ஆலயவழிபாடும் அடியார் வழிபாடும் "எல்லா வகையும்" என்றதில் அடங்கும்.

சீவன் முத்தர்கள் வாசனாமலத்தினால் மனந் தாக்கப்படாமைக்காகப் பஞ்சாட்சர செபஞ் செய்வதுபோல, இந்திரியங்கள் தாக்கப்படாமலிருப்பதற்காக மெய்யடியாரையுந் திருக்கோயிலையுஞ் சிவமென வழிபடுவர். இதை "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா, அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ, மாலறநேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானு மரனெனத் தொழுமே" என்பதிலும், "கள்ளேன் நினதடியாரோ டல்லால் நரகம் புகினும்" என்பதிலும், "மெய்யினேம் அவனடியார் அடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" என்பதிலுங் காண்க. சிவலிங்கம் முதலிய திருமேனிகளிற் சரியாவான்களுக்குச் சிவபெருமான் மறைந்துநின்று அருள்செய்வர். மந்திரக்கியாசத்தால் வழிபடுங் கிரியாவான்களுக்கும் மந்திரங்களால் வழிபடும் யோகிகளுக்கும் அவ்வம் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளில் அவ்வப்போது தோன்றிநின்று அருள் செய்வர். அன்புமாத்திரையாய் வழிபடும் ஞானிகளுக்கு அவ்வன்பே தானாய் அத்திருமேனிகளில் எப்போதும் வெளிப்பட்டு நின்று அருள்செய்வர். முத்தர்கள் வாசனாமலத்தின் தாக்கத்தை நீக்குதற்கு அடியார்களையும் ஆலயங்களையும் வழிபடுவாராயின், மும்மலவலியோடு நிற்கும் மலங்களின் ஓயாத வினையினின்றும் விலகிக்கொள்ள அடியார்களையும் சிவாலயத்தையும் நாங்கள் எவ்வளவு அதிகமாக நாடி வழிபடல் வேண்டும்.

சைவசமயத்திலே விதிக்கப்பட்ட முத்திக்குரிய சாதனங்களாவன:—திருக்கோயில், திருநீறு, திருவைந்தெழுத்து, சிவனடியார் சரித்திரங்கள், சிவனடியார் சங்கம், திருவருட் பாக்கள், நீதி நூல்கள், ஞான நூல்கள் முதலியவைகளும், சரியையிற் சரியையாதி முப்பத்திரண்டு பாதங்களுமாம். பறச்சமயங்கள் பலவற்றில், இந்தச் சாதனங்கள், கோடியில் ஒரு பங்குதானும் இல்லாதிருக்கவும், அவைகளும் ஆன்மாவைஈடேற்றத்தக்க வெவ்வேறு வழிகளென்று சொல்லுவது எத்துணைப் பேதைமை. புறச் சமயங்களை அநுசரித்தல் தீமையென்பதை விளக்க, "பரசமயங்கட் செல்லாப் பாக்கியம்பண்ணேனே" என்று அருணந்தி தேவர் கூறியருளினர்.

சிலர் பஞ்சாட்சர செபத்தினாலும், ஆலய வழிபாட்டினாலும், விரதாநுஷ்டானங்களாலும் தர்ம ஒரு பயனுமடையவில்லை என்று சொல்லுகிறார்கள்; இவர்கள் இவைகளைச்செய்தபோது சிரத்தையில்லாமையே இவ்வாறு சொல்லுதற்குக்காரணம். இயல்பிலே சிரத்தையுள்ளவர்கள் இவைகளின்பயனை விரைவிற்பெறுவர். மற்றையோர் இவற்றின் கருத்தையும் நோக்கத்தையும் உள்ளபடி அறிவதனாற் பயனடைவர். சிலர் சிரத்தையுள்ளோராயினும் தமமாலியன்ற அளவுக்கு மேல் செய்வதனால் அலுத்து இவைகளை வெறுத்துப் பாவிகளாதலுமுண்டு நெடுநேரம் மனசை ஒருவழிப்படுத்தமாட்டாதவர் பஞ்சாக்கர செபத்தை மட்டாகச் செய்யவேண்டும்; பசியை அதிகந் தாங்கமாட்டாதவர்கள் நெடும் பசி விதிக்கப்பட்ட விரதங்களை அநுட்டிக்கத்தொடங்கி, பொழுது போகாதாமே என்று வருந்துவதும், விரதகாலம் சமீபிக்கும்போது அதற்கு அஞ்சுவதுமுண்டு. இது சுமக்கமாட்டாத பாரத்தைச் சுமப்பதால் வரும் பொல்லாங்கு. ஆதலால் இயல்பிலே சிரத்தையில்லாதோர் சமயாநுஷ்டானங்களின் இரகசியங்களை உணர்ந்து சிரத்தையுறல்வேண்டும். எவர்களும் மிகுந்த பிரியத்தோடு செய்து முடிக்கத்தக்க அளவு செப தியான விரதாநுஷ்டானங்களைச் செய்யவேண்டும். அவ்வளவுமாத்திரஞ் செய்வாராயின் சிரத்தையும் அன்பும் வளர்தலால் அவர்கள் திருவருளைப்பெற்று நற்கதியடைவார்கள். வெய்யிலில் அலைந்தவன் நிழலைச் சேரும்போது எவ்வளவு ஆசையோடு போகின்றானோ அவ்வளவு ஆசையோடு உலக முயற்சிகளை விட்டுச் செபம் தியானம் முதலிய சமயாநுஷ்டானங்களைச் செய்யவேண்டும். உலக விஷயங்களாகிய வனாந்தரத்திலே இவ்வளவு நேரமும் அலைந்த நமக்குக் கடவுளை வழிபட்டு ஆன்மாவை ஈடேற்றுதற்கு நேரம் கிடைத்துவிட்டதே என்ற சந்தோஷத்தோடு அம் முயற்சிகளைத் தொடங்கவேண்டும்."

---

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

மூவிலைநற் சூலம்வல னேந்தி னானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடைபோன் றேறு வானை
நால்வேத மாறங்க மாயி னானை
ஆவினிலைந் துகந்தானை யமரர் கோவை
யயன்றிருமா லானானை யனலோன் போற்றும்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.

திருச்சிற்றம்பலம்

---

## 1950-இல் உலகயுத்தம்

### ஜூகோஸிலேவ் அரசாங்க அறிக்கை

1950-ம் ஆண்டில் அதாவது இன்னும் இரண்டு ஆண்டுகளில் மூன்றாவது உலகயுத்தம் ஆரம்பமாகுமென்று ஜூகோஸிலேவிய அரசாங்கம் கருதுகிறது. அவுஸ்திரேலியாவில் உள்ள தன் பிரஜைகளை உடனே ஜூகோஸிலேவியாவுக்கு வருமாறு, அந்த அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருப்பதாக "ஸிட்னி மோர்னிங் ஹெரல்ட்" பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார். இந்நிருபர் மேலும் தெரிவிப்பதாவது:-

"திடீரென, அவுஸ்திரேலியாவில் இருந்த ஜூகோஸிலேவிய மக்கள் தம் தாய்நாட்டுக்கு மீளவேண்டிய காரணம் என்ன என்பதை அறிய ஆவல்கொண்டு விசாரணைபுரிந்தேன். இவ்விஷயமாக 40, 50 ஜூகோஸிலேவியரை விசாரணைபுரிந்தேன். 1950ம் ஆண்டிலே உலகயுத்தமொன்றுமூளும்: அந்த யுத்தத்திலே ருஷியா ஓர் பக்கமாயும், ஆங்கில-அமெரிக்கர் மற்றப் பக்கமாயும், நின்று போராடுவர். ஆனால் ஈற்றில் ருஷியர்தான் வெல்வர். ஆகவே, எங்கள் ஜூகோஸிலேவிய அரசாங்கமும் ருஷியாவின் பக்கத்தில்தான் நிற்கும். அவுஸ்திரேலியா ஆங்கிலர்பக்கம் நிற்கும் ஆகையினால், யுத்தம் மூண்டபின் இங்கே எங்கள் கதி அதோகதியாய் விடும். ஆகவேதான் எங்கள் அரசாங்கம் எங்களைத் திருப்பி அழைக்கிறது என்னும் கருத்துப்பட அவர்களிற் பலர் எனக்குக் கூறினர்

## காந்திஜீயின் முந்திய பிறவி

### கபீர்தாஸராக இருந்தாராம்

தென்னிந்தியாவில் ஈரோடு என்னும் தாலுகாவில் சென்ற வாரம் நிகழ்ந்த ஹிந்து—முஸ்லீம் சமாதானச்சபையில், அத்தாலுகாவின்பிரபல புடவை வியாபாரியான ஸ்ரீ என். மீனாட்சிசுந்தர முதலியார் பேசும்போது, மகாத்மாகாந்தி முந்திய பிறவியில் கபீர்தாஸராக இருந்தார் என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ முதலியார் தொடர்ந்து பேசுகையில் விண்ணுலக ஆவிகளுடன் பேசுவதில் தாம் பயிற்சி பெற்றிருப்பதாகவும், அவ்விதம் பேசியதில் மகாத்மாகாந்தி பூர்வ ஜென்மத்தில் கபீர்தாஸராகப் பிறந்திருந்தாரென்று தாம அறிந்ததாகவும் சொன்னார். மகாத்மாகாந்தியின் ஆவியுடன் பேச இன்னும் ஆறு மாத அவகாசம் வேண்டுமென்றும், ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் விட்டுச்சென்ற வேலையை மகாத்மா காந்தி செய்துவந்ததாகவும், திருவள்ளுவ நாயனார் தம் திருக்குறளில் விவரிக்கும் லட்சணங்களனைத்தும் பொருந்திய லட்சிய புருஷன் மகாத்மாவே என்றும் ஸ்ரீ முதலியார் தொடர்ந்து கூறினார்.

---

## சினிமாவிற் சில ஆபாசங்கள்

ஈ. த. சோக்கம்மாள், பி. ஏ., எல். டி.

புராணக் கதைகளைத் தழுவிய பேசும் படங்கள் பலவற்றைக் காண்கின்றோம். அவற்றில் எப்படியாவது, எந்தச் சந்தர்ப்பத்திலாவது மும்மூர்த்திகளில் ஒருவரையாகிலும்காணலாம். "சிவ-பார்வதி" நடனத்தை எடுத்துக்கொள்வோம். அதைப் பார்க்கும்போது மனசில் பக்தி ஏற்படுகிறதா? ஏதோ வேஷத்தோடு ஆடுவதுபோல் தோன்றுகிறது. பெரும்பாலும் இவ்விதமான காட்சிகளை தமிழ்ப் படங்களில் அதிகமாகக் காண்கின்றோம். இது மிகவும் வருந்தத்தரும் விஷயமே. முஸ்லிம்கள், மகமதுவைத் திரையில் காட்டுகிறதில்லை. கிறிஸ்தவ மத சம்பந்தமான படங்களிலும (Sacred-Heart) 'ஸேக்ரட் ஹார்ட்' என்ற சொரூபம் ஒரு வினாடிப்பொழுது காட்டப்பட்டு மறைக்கப்படுகிறதே தவிர விமரிசையாய்த் திரையிற் காட்டப்படுகிறதில்லை. ஹிந்துமதக் கடவுள் இவ்வழிக்கு வரவில்லை போலும்!

புராணக் கதைகளின் காலமும், நோக்கமும், நாகரீகமும் வேறு. கதையொன்றாயிருந்தாலும், அதிலுள்ள

தொடர்ச்சி 3 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
மாசி ீ உஉ வ வெள்ளிக்கிழமை

## வட இலங்கைத் துறைமுகங்கள்

"இந்தியாவுக்குச் சுயராச்சியம் கஷ்டப்பட்டுக் கிடைத்தது; இந்த இலங்கைக்கு எவ்வகையான கஷ்டமுமில்லாமல் இலகுவாகக் கிடைத்துவிட்டது; இனி எங்களுக்கு என்ன குறை" என்று இலங்கை மக்களுள் விசேஷமாகச் சிங்களரும், அவர்களைச்சேர்ந்த ஏனைய வகுப்பு மக்களும் பரஸ்பரம்பேசி உள்ளம் பூரித்து ஆநந்தமடையக் காண்கின்றேம்; ஆனால் புதிதாகக் கிடைத்த சுயராச்சியத்தில் வந்த வரக்கூடிய நன்மைகளைச் சிந்திக்குமிடத்தில், சுயராச்சியமென்பது வார்த்தை யலங்காரமே யொழிய, செயலளவில் அதிகமில்லை யென்றே சொல்லலாம்.

உண்மையை ஆராயுமிடத்து இந்த வட இலங்கையிலே வசிக்கும் மனுஷர் விஷயத்தில், இவர்களுக்குப் பூரண சுதந்திரத்திற்குப்பதிலாகப் பிறப் புரிமைதானும் கிடைக்கவில்லை யெனச் சொல்லக்கிடக்கின்றதே! தமிழ் மக்களின் தாய்நாடெனப்படும் இந்தியாவுக்கும் இந்த வட இலங்கைக்குமுரிய தூரம் அதிகமல்ல; இரண்டு நாட்டிற்கும் இடையிற் கிடக்கும் பாககு நீரிணையின் அகலம் 30 மைலுக்கு மேற்படாததன்று; இப்படிச் சமீபமாக விருந்தாலும், இங்குள்ள துறைமுகங்களிலிருந்து சமீப வழியாக இந்திய கரைக்குச் செல்வதாகிய பிறப்புரிமையைத்தானும் பெற்றிலர்; வட இலங்கையிலுள்ள பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை, காங்கேயன்றுறை, ஊர்காவற்றுறை என்னும் இத்துறைமுகங்கள், இங்கிருந்து இந்தியாவிற்கு மக்கள் போய்வாராவண்ணம் அடைக்கப்பட்டு, அதிகாரிகளால் தடுக்கப்பட்டு நாற்பத்தைந்துவருட காலத்திற்கு மேற்பட்டுவிட்டது; இத்துறைமுகங்கள் நான்கினையும், அஃது இயலாவழி ஒன்றையேனுந் திறந்து அதுவாயிலாக வட இலங்கை மக்கள் இந்தியாவிற்கு, வியாபார நிமித்தமாகவேனும், யாத்திரை நிமித்தமாகவேனும், கல்வி விருத்தி விஷயமாகவேனும் போக்குவரவு செய்தற்காகிய ஒழுங்குகளை அமைக்க வேண்டுமென்ற முயற்சி இப்பகுதியிலுள்ள மக்களாற் பல வருடங்களாகச் செய்யப்படலாயது; அரசாங்கசபை யிருந்த காலத்தில் வடஇலங்கைப் பகுதியிலுள்ள மக்களால் இம்முயற்சி செய்யப்படலாயது; அரசாங்கசபை இருந்த காலத்தில் வடஇலங்கைப் பகுதியிலுள்ள பிரதிநிதிகளும் ஒரு அளவிற்கு முயற்சித்தார்கள்; ஆனல் பலிக்கவில்லை; இந்தப் புதிய பாராளுமன்றப் பரிபாலனம் ஆரம்பித்தும் இற்றைவரையில் இவ்வடபகுதித் துறைமுகங்களைத் திறந்து இங்குள்ளார் இந்தியாவிற்குப் போய்வருதற்கான முயற்சிகள் செய்யப்படுதலைக் காணேம். உலகத்திலே இந்த நான்கு துறைமுகங்களையுந் தவிர, வேறு இப்படியாக அடைக்கப்பட்டுள்ள துறைமுகம் இல்லையென்று சொல்லுகிறார்கள்; இது மெய்தானே?

இத் துறைமுகங்கள் நீடித்த காலமாக அடைக்கப்பட்டிருப்பதினலே நேர்ந்த கஷ்ட நஷ்டங்கள் பலவெனலாம்; நான்கு துறைமுகங்களிலும் தனித்தனியே பலநூற்றுக்கணக்கான கூலிச்சனங்களும் தொழிலாளர்களும் தொழில் செய்து அக்காலத்திலே காலங் கழித்தார்கள்; இந்தியாவுக்கும் இந்த வடஇலங்கைக்குமிடையே இடையறு வியாபாரம் முந்தி நடைபெற்று வந்தது; வடஇலங்கையிலுள்ள சைவமக்கள் பலசௌகரியங்களுடன் இந்தியாவிற்குச் சென்று தீர்த்த யாத்திரை தலயாத்திரை செய்து வந்தார்கள்; இங்குள்ள மாணவர் பலர் அக்காலத்திலே ஆரம்பக் கல்வியை இங்குள்ள கலாசாலைகளிற் பயின்றுகொண்டு, அதிக பொருட்செலவுஞ் சிரமமு மில்லாமல் உயர்தரக் கல்வியை இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளிற் பயின்று மேல் வகுப்புக்களிற் சித்தியடைந்து மீண்டு இந்நாட்டிற் கல்வியை விருத்திசெய்து மதிப்புடன் வாழ்ந்தார்கள்; இப்பொழுதும் வட இலங்கையில் உள்ள மாணவர்கள் பலர், மேல் வகுப்பிற் சேர்ந்து படித்துச் சித்தி பெறுவதற்காகத் தென்னிந்தியாவிற்குப் போயிருந்து படிப்பதை நாம் அறிவோம்; இம்மாணவர்கள் இப்படிச் செய்தற்குக் காரணம், கொழும்பிலே போய் விடுதிவிட்டுப் படித்தற்கு அதிக செலவுண்டாகுமெனவும், சிறந்த கல்வி பயிலவேண்டின் அதற்காகியவூர் இந்தியாவேயாகுமெனவும் சொல்லுகிறார்கள்

ஒரு காலத்திலே, கொழும்புத் துறைமுகமொன்று தவிர, இலங்கையிலுள்ள ஏனைய துறைமுகங்களைக்காட்டிலும், ஏற்றுமதி இறக்குமதி முதலிய வியாபார விஷயத்திலும், பிரயாணிகளின் போக்கு வரவு விஷயத்திலும் சிறந்து விளங்கிய வட இலங்கையிலுள்ள ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை, காங்கேயன்றுறை என்னும் இந்நான்கும் இப்பொழுது பாழடைந்து வியாபாரமுஞ் சனச்சஞ்சாரமுங்குன்றி, ஆங்காங்குள்ள கெல்லுக் கிட்டங்கிகளெல்லாம் கிலமடைந்தும் அழிந்தும்போய்விட, குன்றிக் கிடக்கின்றதற்குக் காரணமென்ன? இந்த வடஇலங்கைத் துறைமுகங்கள் அடைக்கப்பட்டுக் கிடப்பதுதான்; அதிகம் வரைவதனலாவதென்ன! இந்த வட இலங்கையிலுள்ள மக்கள் தொழில் பெற்றுச் சீவனஞ்செய்ய வேண்டுமானல், வட இலங்கையிலே முந்தியிருந்த செல்வம் கல்வி முதலியன மீண்டும் வர வேண்டுமானல், இன்னும் இங்குள்ள மக்கள் சகல நலன்களோடும் வாழ வேண்டுமானல் தொழில் முயற்சியில்லாமை அற்றுப்போக வேண்டுமானல், பாராளுமன்றத்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் இத்துறைமுகங்களைத் தொன்மைபோல் வழங்கச் செய்து வைத்தற்கான முயற்சிகளை இன்னே செய்யவேண்டும்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—54)

### "தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்"

"அம்மா, எல்லாமறிந்த நீங்கள், நாங்கள் அறியாமையால் ஏதும்பிழை செய்தால், அப்பிழைகளைத் திருத்தி எங்களை நல்லவழியில் நடக்கச்செய்ய வேண்டிய நீங்கள், இப்படியெல்லாம் விபரீதப்படச் சொல்லலாமா? எங்கள் அருமைத் தங்கைச்சி தனபாக்கியத்தின் குணம் நடை அடக்கம் பொறை இதமான ஊடாட்டம் இனிய வார்த்தை, வனப்பு முதலானவைகளை அவதானிக்கும்போது, எங்கள் தனபாக்கியம உயர்குடிப் பிறந்தவளென்பதை நாங்கள் ஊகித்தறிந்துகொள்ளலாம். அம்மா, "நடையும் நடைப்பழக்கம், நட்புந் தயையும் பிறவிக்குணம்" என்றல்லவா சொல்லப்பட்டிருக்கிறது; பிறப்பினும் ஒழுக்கம் பெரியதம்மா, குலத் தழைவதாகுங் குணம்; "தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்றபடி, எங்கள் தனபாக்கியம் சாதிமரபில் ஒருபோது குறைந்ததா யிருந்தாலும், அந்தத்தங்கைச்சியின் குணமும் ஒழுக்கமும் அவளுக்கு எல்லா மதிப்பையுந் தருமே: குலத்தைக்காட்டிலும் குணமே ஒருவரை மேலான நிலையில் வைக்கும்; பிறப்பைப் பொருட்படுத்த வேண்டாதம்மா; எங்கள் தங்கைச்சி மேலான பிறப்பென்பதிற் சந்தேகமில்லை; நீங்கள் சந்தேகப்படுவது போல், அப்படி யில்லாவிட்டாலும் தாழ்ந்த இடத்திற் பிறந்தவரும் பிறந்தவரும் மேலான நிலையை அடைவது உலகத்திலே சகசந்தானே;

> சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
> திருமுடியின் மேலிருக்கும்
> திரழ்ச்சிப்பியுடலிற்சனித்தமுத்தாரமாது
> தேகத்தின் மேலிருக்கும்
> போற்றியிடு பூச்சியின் வாயினூல்
> பட்டென்று
> பூசைக்கு நேசமாகும்
> புகலரிய வண்டெச்சி லானதேன்
> தேவர்கொள்
> புனிதவபி டேக மாகும்
> சாற்றிய புலாலெடு பிறந்தகோ ரோசனை
> சவாதுடமு கனைவர்க்கு மாஞ்
> சாதியினத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
> சபையின்மேல் வட்ட மன்றோ
> மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
> வைத்தமெய்ஞ் ஞான முதலே!
> மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
> மலைமேவு குமரேசனே.

என்றல்லவா பாடியிருக்கிறார்கள். சனபாக்கியம் எங்களுக்கு அரிதிற் கிடைக்கும் பொருள் அம்மா" என்று சிவபாக்கியந் தாய்க்கு உறைக்கச் சொன்னள், கேட்டதாயும் தான் சொன்னது தவறென்பதை உடனே உணர்ந்து, தன் மகளைப் பார்த்து நான் அறியாமையினற் சொல்லிவிட்டேன் இப்பொழுது சொன்னதை, மக்காள்! உங்கள் அண்ணனுக்காயினும், அந்தப் பிள்ளைக்காயினுஞ் சொல்லிவிடாதீர்கள்; உலகம் ஏதுங்குறை சொல்லுமென்று பயந்து சொன்னேனேயொழிய, அந்தப் பிள்ளையை உங்கள் அண்ணனுக்குக் கல்யாணஞ் செய்து வைப்பது எனக்குப் பூரணசம்மதம்" என்று சமாதானஞ் சொன்னள்.

### "அன்னையில்லப் பிள்ளை இருப்பது அவமானம்"

இவர்கள் விஷயம் இங்ஙனமாக, கண்ணகியம்மை சொன்ன வார்த்தைகள் அடுத்த அறையிற் கேட்டுக் கொண்டிருந்த தனபாக்கியத்தின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்திவிட்டன; அவள் தனக்குள்ள குறை கூடயிட்டுக் கண்ணகியம்மையையேனும் வேறு எவரையேனும் பழிபெண்ணினளல்லள்; தன் பொல்லா விதியை நினைந்து நினைந்து உள்ளம் நொந்தாள்: "ஆ! தெய்வமே! உடலை விட்டு உயிரைப்பிரிப்பதுபோல், என்னைத் தன்னந்தனியே விட்டு என் பெற்றோரையு பிரித்துவிட்டாயே! நான் என்ன செய்வேன்! எங்கள் சொந்தவூரிலே பெற்றோரை, பாவியாகிய நான் பிரிந்தாலும என் உற்றார் அயலாரிடத்திற்போய் ஒதுங்கலாம்: செய்வதென்னவென் றறியாது தாமரையிலையில் நீர்த்துளிபோல் தனியே நின்று கலங்குகின்றேனே! என்னைப் பெற்றவர்கள் தங்கள்பேரையொழிய, இந்தவூரில் வந்திருக்கும் தங்கள் நண்பர் சுற்றத்தார் பெயரை, அவர்களிருக்கும இடத்தை எனக்கு முந்திச் சொல்லி வைத்தார்களில்லையே: ஐயோ! பாவம்! என் அருமைப் பெற்றோரை நான குறைசெல்வது அநியாயம்; இப்படி மின்னுமல் முழங்காமல் வெள்ளிடி தங்களுக்கும் எனக்கும் விழுமென்று அவர்கள் கனவிலும் காத்திருந்ததில்லையே! கண்ணகியாச்சியையும் நான் குறை சொல்லக்கூடாது அந்த ஆச்சி உண்மையை மறைக்காமற் சொல்லியது குற்றமா! இன்னசாதி இன்னமரபு என்பதை அறியாமல் எவராயினும ஒரு

தொடர்ச்சி 5-ம் பக்கம்

●

# மகா சிவராத்திரி

சிவ விரதங்களுட் சிவராத்திரி விரதம் சிறந்ததாகும். இவ்விரதம் வருகிற செவ்வாய்க்கிழமை (9-3-48) நிகழும்; சிவராத்திரிவிரதத்தை விதிப்படி அநுட்டிப் போர்க்குப் பரமசிவனுடைய திருவருள் கைகூட, பலவகை நன்மையு முண்டா மென்பது சைவநூற் கொள்கை; இச் சிவவிரதத்தை அநுட்டிப்பேர் குறித்த காலங்களில் ஸ்நானஞ் சந்தியா வந்தனம் முதலிய நித்திய கடனை முடித்து அன்று முழுவதும் உபவாசமாக விருந்து, அதனேடு இராக் காலத்தில் உறக்கத்தை நீத்துப் பகலும் இரவும் ஆலய மெழுப டு, ஆன்மார்த்தபூசை செய்வோர் அப்படியான பூசை செய்தல், சிவபுராணம் படித்தல் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களை முறைப்படி ஓதுதல் ஓதக்கேட்டு உவத்தல் முதலாம் சற்கருமங்களில் ஈடுபட்டு, அடுத்தநாட் காலை ஒன்பது மணிக் கிடையில் சிவநேயர்கள் உற்றுறவினருடன் பாரயணஞ் செய்ய வேண்டு மெனச் சொல்லப்பட்டிருக்கிறது; அடுத்தநாட் பகலுறக்கஞ் செய்வோர் பெருந்தவறு செய்தவர்களாவர்; இக் காலத்தில் நம்மவருட் சிலர், இச் சிவவிரதத்தை அநுட்டிக்கத் தொடங்கி, நித்திரை விழிக்க வகையறியாது, சீட்டாடியும், சினிமாப் பார்க்கச் சென்றும், வேறு பொருந்தாக் கருமங்களைச் செய்யப் புகுந்தும் நித்திரை விழிக்க முயலுகிறார்கள்; இச் செயல் "குளிக்கப்போய்ச் சேறுபூசி வாறதும்": இதனைக் காட்டிலும சிவராத்திரி விரதத்தை அநுட்டிக்க முயலா தொழிதல் உத்தமமெனலாம்; பசி பஞ்சம் பிணி முதலிய அனர்த்தங்கள் தலைப்பட்டுள்ள இக் காலத்திலே சைவமக்கள் விதிப்படி சிவராத்திரி விரதத்தை அநுட்டித்து இறைவனை வணங்கி ஈடேறுதல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையூர்த் திட்டம்

## தாழ்த்தப்பட்டோர் கோரிக்கை

கரையூரில் சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பல வீடுகள் கட்டப்படவிருக்கின்றன இவற்றுள் நாலில் ஒரு பாகத்தையேனும் தமக்கென வேருக ஒதுக்கித் தரவேண்டுமெனக் கரையூரில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்புகின்றனர். செனேற்சபையில் அங்கத்தவராயுள்ள முதலியார் ஏ பீ ராஜேந்திரா இவ்விஷயமாக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்காவைச் சந்தித்து தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக ஓர் மனுவைச் சமர்ப்பித்திருக்கிறார் கரையூர்ச்சேரி ஒழிப்புத்திட்டத்தின்படி நிர்மாணிக்கப்படும் வீடுகளில் ஜாதிப் பாகுபாடு காண்பிக்கப்படுகிறதென்றும் முதலியார் ராஜேந்திரா மந்திரிக்குத் தெரிவித்திருக்கிறார்.

முதலியார் ராஜேந்திராவின் கூற்றுக்கு ஆதாரமேயில்லை என்று, யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு க பொன்னம்பலம் ஸ்தல ஸ்தாபனமந்திரிக்கு அறிவித்திருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது:

'சுகாதார விஷயத்தில் மிகவும் கேவலமான இடங்களில் வசித்துவந்த மக்களின் நலத்துக்காகவே கரையூர் வீடுகட்டும் திட்டம் தொடங்கப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் வசிக்கும் சேரிகள் சுத்தம் செய்யப்படும்வரை அவர்களிலும் பார்க்க நல்ல நிலையில் உள்ளவர்களின் சேரிகளைச் சுத்தம் செய்யும் வேலையை மேற்கொள்ளவொண்ணது இதனை ஜாதி அடிப்படை கொண்ட பாகுபாடாகக் கருதமுடியாது.

"கரையூரில் அதிமோசமான நிலையில் உள்ள செம்படவர் வசிக்கும் இடங்களைத்தான் முதலில் சுத்தம் செய்யவேண்டும். அதன்பின்னரேயே மற்றவர்கள் விஷயம் கவனிக்கப்படல்வேண்டும்.

"கரையூரில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தவரிற் பெரும்பாலமையினர் நகரசபைத் தோட்டிகளாவர் இத் தோட்டிகளுக்கு வீடுகட்டும்திட்டம் அவசியந்தான்.

### இன்னும் 3 லட்சம்

194 -ம் 48-ம் வருஷ வரவு செலவுத் திட்டத்தில் கரையூர் வீடுகட்டும் திட்டத்துக்கு மேற்கொண்டு 3லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இத்திட்டத்துக்கு எல்லாமாக 28 லட்சம் ரூபா செலவாகும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

## முதல் வேலை

### வேலை இல்லாதாருக்கு நிவாரணம்

சென்ற திங்கள் கொலன்னுவையில் இருந்துவந்த ஒரு தூதுகோஷ்டியினர் தொழில் மந்திரி ஜனுப் டி பி ஜயாவைப்பேட்டிகண்டு 'அந்நகரில் 5000பேர் வேலையில்லாது திண்டாடி வருவதாகவும் அவர்களுக்குத் தொழில்கள் தரவேண்டும்" என்றும் வேண்டிக்கொண்டனர்.

மந்திரி தூது கோஷ்டியினரின் முறையீட்டைக் கேட்டபின்னர் தாம் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதோடு கொலன்னுவையில் வேலையில்லாத் தொழிலாளர்களின் பதிவுக் காரியாலயம் ஒன்றைத் தாம் திறக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

ஜனுப் ஜயா வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி பேசுகையில் அரசாங்கம் தொழிலில்லாதாருக்கு நிவாரண மளிப்பதையே முதன்மையாகக் கருதும் எனத் தெரிவித்தார். சமூக சேவைக் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டபடி சுகாதார சேவைகளுக்கு முதன்மைஸ்தானம் கொடுக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குக் காரணம் நாட்டின் சுகாதார நிலைமை அவ்வளவு படுமோசமாக இல்லாததே என்றும் அவர் கூறினர்.

### எல்லைக் காந்தியின் அறிக்கை

பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள கராச்சிக்கு வந்துள்ள எல்லைக் காந்தி கபார்கான் 'டாண்' பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்

'சுயேச்சை ஆதிபத்திய பட்டாணிஸ்தானத்தை நிறுவி பாகிஸ்தானை நான் சூனியமாக்க விரும்புவதாக கூறும் தகவல்கள் சுத்தப் பொய். பாகிஸ்தானில் உள்ளடங்கிய சுயேச்சை யூனிட்டாக இருக்கும் பட்டாணிஸ்தானமே நானடையும் சுயராஜ்யம்.

### இலங்கை இந்தியக் காங்கிரஸ் பார்ப்பாணம்

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், நிகழும் மார்ச் மாதம் 6 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் நாலரை மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

## இலங்கை—இந்திய ஐக்கியம்

### ஈற்றில் ஏற்படுவது நிச்சயம்

லண்டனிலுள்ள இலங்கை — இந்திய மாணவர்கள் சென்றவாரம் ஓர் கூட்டம் கூடி இலங்கையில் குடியேறியுள்ள இந்திய மக்களின் நிலைமைபற்றி விவாதித்தனர்

குறித்த இக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த திரு என் சுப்பிரமணியம் பேசுகையில் இலங்கை இந்தியர்களில் அநேகர் இந்தியாவுடன் இலங்கை காலகதியிற் சேர்ந்துகொள்வதையே விரும்புவதாகத் தெரிவித்தார்

இலங்கை வெகுசீக்கிரத்தில் ஓர்சோஷலிஸ்ட் குடியரசாகப் பிரகடனம் செய்யப்படுவதைத் தாம் எதிர்பார்ப்பதாகவும். ஓர் ஐக்கிய இந்திய சோஷலிஸ்ட் குடியரசுடன் அது சேர்ந்துகொள்ளு மென்றும் இன்னோர் மாணவர் தெரிவித்தார். "இலங்கை இந்தியாவின் ஓர் பகுதியாகவே முன்னர் விளங்கியது. இனியும் அது அப்படியே விளங்கும்" என அவர் கூறினர்.

## காந்திக் கிராமம்

### இலங்கையில் நிறுவ முயற்சி

இலங்கையிலே மகாத்மா காந்தியின் பெயரால் ஓர் கிராமத்தை வகுக்க, இலங்கை இந்தியக்காங்கிரஸ் திட்டம் வகுத்திருக்கிறது இதன்பொருட்டு 15 லட்சம் ரூபா சேகரிக்க அது நிச்சயித்துள்ளது.

இக்கிராமம் "காந்திக்கிராமம்" என்று அழைக்கப்படும். இக்கிராமத்தில் குடிசைக் கைத்தொழில்களும் மகாத்மாவின் வார்தாத் திட்டப்படி பள்ளிக்கூடங்களும் இருக்கும்

இத்தகைய ஓர் கிராமத்தை நிறுவுவதில் அரசாங்கமும் உதவி புரியவேண்டும் என்று இலங்கை இந்திய காங்கிரசின் அதிகாரபீடம் கருதுகிறது அதன்பொருட்டு, ஒரு தூதுக்கோஷ்டிப் பிரதமர் சேனநாயக்காவைக் கூடிய சீக்கிரத்திற் சந்திக்கும்.

குறித்த இக்கூட்டத்தில் ஓர்இலங்கை—இந்திய சங்கம் நிறுவவும் தீர்மானிக்கப்பட்டது

# வேலணை மகாஜனசபை

ஐயா,

25—2—48ல் கூடிய எங்கள் வேலணை மகாஜனசபை வேலணை அரசினர் மத்திய பாடசாலை நிரந்தர ஸ்தானம்பற்றி தற்போது சூழ்ச்சியாய் நிகழும் காரியங்களைப் பற்றிக் கருத்துடன் கலந்து பேசியபின் பின்வரும் தீர்மானங்களைக் கல்விப்பகுதியாரினதும் அபிமானிகளினதும் மற்றும் பிரபல பெரியார்களினதும் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தது.

1. 1946-ம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பமானபோதே வேலணைப்பகுதியில் குறிப்பிட்ட மூன்று இடங்களில் அப்பாடசாலைக்கு நிலங்களும் நன்கொடைகளுமளிப்பதாக தகுந்த நியாயத்துடன் பொதுமக்கள் கிளர்ச்சி செய்தனர். காலஞ்சென்ற தீவுப்பகுதி மணியகாரன அவர்களின பாரியார் திருமதி சோ. செல்லம் அவர்கள் வேலணை வங்களாவுக் கணித்தாக இப்பாடசாலை தொடங்குதற்கு தகுந்த நிலமும் பணம் தருவதாக கல்வி மந்திரியார் கன்னங்கரா எம் தீவுக்கு இது விஷயமாக விஜயம் செய்து வாக்களித்ததும் அன்றி நிலமும் அரசினர்க்கு எழுதியும் வழங்கப்பட்டது அப்பால் சில செல்வாக்கானவர்களின் முயற்சியால் இப்பாடசாலை தற்போதிருக்கும் இடத்திற்குப் பின் மாற்றியமைக்கப்பட்டது. இது கண்ட பொதுமக்கள் மேலும் கிளர்ச்சி செய்தபோது சென்ற அரசாங்கசபைத் தலைவரும் தீவுப்பகுதிப் பிரதிநிதியுமான சேர் துரைசுவாமி அவர்களும் வேலணைக் கிராமச்சங்கத்தலைவர் திரு மருதையனார் அவர்களும் ஏன் கல்விமந்திரியார் அவர்கள் பாடசாலைத்திறப்புவிழாவுக்குச் சமுகமளித்தபோதுங்கூட தற்போது அமைந்திருக்குமிடத்திலிருந்து இனியும் பாடசாலை ஒரு அநுகூலமேனும் மேற்குநோக்கி தற்போது இரகசியமாய் நிகழ்த்தும் முடிபுபோல, போகமாட்டாது என வாக்குறுதியளித்துள்ளனர். அப்பெரியார்களினது வாக்குகள் இப்போது புறக்கணிக்கப்படுவதை இச்சபை பலமாக ஆட்சேபிக்கிறது.

2, சில தனிப்பட்டவர்கள் தமது செல்வாக்கை உபயோகித்து பாமர ஜனங்களின் குழந்தைகள் அதுவும் தற்போதும் நியாயமான தூரத்திலிருந்து தினந்தோறும் கஷ்டப்பட்டுச் சென்று கல்விகற்கும் குழந்தைகளை இன்னும் பாடசாலையில் பெரும்பான்மையான எங்கள் பகுதிப் பிள்ளைகளை மேலும் ஒருமைல் அதிகம் நடந்து புளியங்கூடல் சந்திக்குப் போகச்செய்ய முயல்வதை இச்சபை கவலையுடன் கவனிக்கிறது.

3. இப்பொழுது முயலப்படும் புளியங்கூடல் சந்திக்கு மூன்றுமைல் மேற்கே ஊர்காவற்றுறையில் இரு ஆங்கில பாடசாலைகள் இருப்பதாலும், வேலணையின் ஒரு பகுதியான மண்கும்பான் அல்லைப்பிட்டியில் இருந்து இச்சந்தி 6 அல்லது 7க்கு அதிகமான மைல் தூரத்தில் அமைகிறதாலும் இது ஒரு தக்க மத்திய தானமல்லவென்பது வெளிப்படையாதலால் அவ்விடத்தில்பாடசாலை அமைக்கக்கூடாதென இச்சபை அரசினரை வேண்டி நியாயம் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறது.

4. இப் பாடசாலை தற்போதிருக்கும் இடத்தில் இருந்து கிழக்கே $\frac{3}{4}$ மைல் தூரத்தில் வேலணை வங்களாவடியில் 1946-ம் ஆண்டே திருமதி சோ செல்லம் அவர்களால் உபகரிக்கப்பட்டதும் தீவுக்கு மத்திய தானமானதும், போக்குவரவுக்கு மத்திய தானமானதும் சந்தி நிலத்தினும் பன்மடங்கு விசேடம் பொருந்தியதுமான நிலத்தில் அமைப்பது சாலப் பொருத்தமானதென இச்சபை தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறது அன்றியும் இதுசம்பந்தமாகத் தன்னுலான கடமை எதையும் செய்து உதவ இச்சபை சித்தமாய் இருக்கிறது.

ஷை சபைக் காரியதரிசி.

# சினிமாவிற் சில ஆபாசங்கள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கருத்து வேறென்று. ஆகையால் கதையைத் திரையில் பார்க்கும்போது வெளி வேஷந்தான் பார்க்கிறோம். உட்கருத்து புலனுவதில்லை. பேசும படத்தின முக்கிய நோக்கம் பொழுது போக்கு. ஈசுவரன் முக்திக்கு வழி காட்டும் பரம்பொருள். அவரைப் பொழுதுபோக்குப் பொருளாக உபயோகிப்பது சரியல்ல. பரம பொருளைத்திரையில்காட்டாம விருப்பது ஹிந்துமதத்திற்கு மிக்கப் பயன் தரும். திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானை

"கோவண முடுத்த வாறுங்
கோளர வசைத்த வாறுந்
திவணச் சாம்பர் பூசித் திருவுரு
இருந்த வாறும
பூவணக் கிழவனாரைப் புலியுரி
யரைய னாரை
ஏவணச் சிலையினாரை யாவரே
யெழுதுவாரே"

என்று வர்ணித்துப் பாடுகிறார். அதாவது கோவணத்தை உடுத்திக்கொண்டிருக்கும் முறையையும், அவர் அணிந்த பாம்புகள் அசையும் முறையையும், செந்நிறம் பூத்த சாம்பல் பூசிய மேனி இருக்கும் முறையையும் யாரால் ஓவியப்படுத்த முடியும்? அப்படியிருக்க வெள்ளித்திரையிலே ஒருவனை கிழக்கோலத்துடன், புலித்தோல் அரைக்குக் கட்டி, உடல் நிரம்ப வெண்பொடி பூசி, பாம்புகளை மாலையாகப் போட்டுவிட்டால், அவ்வுருவம் பரமசிவனின் உருவமாகுமா? அப்பர் சுவாமிகள் சொல்லும சாம்பற்பூச்சு எப்பேர்ப்பட்டதென்றால் அது "திவணச் சாம்பல்" நீறு பூத்த நெருப்பு, உள்ளே இருக்கும அனலின் செஞ்ஜோதி வீசும் சாம்பல். அந்த 'மேக் அப்' எவரால் கொடுக்கமுடியும்? திருவுருவின் வண்ணத்தைக் கண்டவர் அவ்வுருவுடன் கலந்தனர். அதனுல் படத்தில் காட்ட இயலாது. இன்னும் அப்பர் சுவாமிகள் மற்ருெரு இடத்தில்

"குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
புனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டு
வதே யிந்த மாநிலத்தே"

என்று சொல்கிறார். இதைத் தழுவி சில படங்களில் "மேக் அப்" கொடுத்துவிட்டதாக எண்ணுகிறார்கள்; வில்போல் வளைந்த புருவமும், கொவ்வைப் பழத்தைப்போன்ற சிவப்புநிற முள்ள வாய்ப்பூச்சும், பவளம்போல் மேனியில் பால் போன்ற வெண்மை நிறமுள்ள திருநீறு பூசப்பட்டும் இருக்கிற 'மேக்அப்', ஒரு நடிகருக்கு அமைத்துச் சிவபெருமான் என்று எண்ணச் சொல்கிறார்கள். ஆனல் அந்த நடிகரின் முகத்தில், குமிண் சிரிப்பும், ஜோதி ஒளியும் ஒன்றும் காணப்படுவதில்லை. சில சமயங்களில் பயங்கரத் தோற்றமே அளிக்கிறது. சிறு குழந்தைகள் திரையில் இருக்கும் மேக்அப் சிவபெருமானைக்கண்டு அலறியதை நான் கண்ணுரப் பார்த்திருக்கிறேன்.

இதுமட்டுமா? பார்வதி தேவியைச் சக்தி ரூபத்திற் பார்ப்பதற்குப் பதிலாக தற்கால நவநாகரீக உடையிற் காண்கின்றோம்!

நாம், சுதந்திர இந்தியாவில், ஒரு தனி அந்தஸ்து அடைந்திருக்கிறோம நம்முடைய ஹிந்துமதமோ மிகவும் மகத்தான மதம். இவ் வெண்ணத்தைக் கொண்டு இனிப் பிடிக்கும் பேசும்படங்களில் காண அரிய பரம்பொருளையும் பராசக்தியையும் திரையில் காட்டாது தடுப்பதே நமது கடமையாகும்.—பேசும்படம

## கைப்பணிப் பாடசாலை

நிகழும் 1948ம் ஆண்டு பெப்ரவரிமீ 22ந் உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் சுகம் கல்விமந்திரி ஈ ஏ நுகவெல, ஸ்ரீமதி நுகவெல, டி பி டிக்கிரிபண்டா பாணபொக்கே ஸ்ரீமான் டி பி பாணபொக்கே பார்லிமன்ற அங்கத்தவர் இவர்கள் பாடசாலை தலைவர் அவர்களால் மாலையிடப்பட்டனர்:

பின்பு அவர் ஆண் பெண் மாணவர் சாரண இயக்கத்தைப் பார்வையிட்டார். ஸ்ரீமதி நுகவெல அவர்கள் புதுக்கட்டிடத்தில் விளக்கேற்றினர். பிற்பாடு திரு. டபிள்யூ எம். வீரக்கோன் பண்டா அவர்களது ஸ்ரீமான் ஆர் எம் நாராயண சுவாமி அவர்களதும் புகைப்படங்கள் தொங்கவிடப்பட்டன.

பாடசாலை மாணவிகளால் வரவேற்புப் பா கூறப்பட்டது. திரு சேனவிரத்தன் ஆசிரியரால் பாடசாலைக் குறிப்புக்கள் வாசிக்கப்பட்டன கல்விமந்திரி பாடசாலையைப்பற்றி சில குறிப்புரைகள் கூறினர். மத்திய மாகாண பெரும்பாக வித்தியாதிகாரி ஸ்ரீமான் எஸ் கே ராஜசிங்கம் என்பவரால் பெற்ருர்பாடசாலை என்னும் விஷயத்தைப்பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசப்பட்டது. ஷை பாடசாலை மாணவன் கருணைரத்தினம் என்பவரால் வந்தனோபசாரம் கூறப்பட்டது. இவர்கள் எல்லோரையும் தேனீர் விருந்துக்காக பாடசாலை பெண்கள் விடுதிக்கு அழைக்கப்பட்டனர் இத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. —நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி மார்ச் 6

காலை 7 15 கிதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில்செய்திகள் 7 30 எ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவிழிமிழலை என் சுப்பிரமணிடபிள்ளை வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு

1 திருவிழிமிழலை என் சுப்பிரமணிய பிள்ளை வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக் குறிப்பு 2 15 பரூர் சாரதாமணி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 பரூர் சாரதாமணி பாட்டு 5 40 நம்மாள்வார் பாசுரவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 7 15 சொல்லாட்சி 7 30 தமிழில் செய்திகள் 7 45 எம் எம் தண்டபாணிதேசிகர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 அறிவிப்புகள் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

ஞாயிறு மார்ச் 7

காலை 7 15 கிதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பரூர் கே ராதாமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 எம் ராஜகோபால சர்மா இசைத்தட்டு 8 30 ஆர் வி சுப்பிரமணியசர்மா வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 தலை தப்பியது போட்டோ பிடிக்கிறவர் நாடகம் 12 40 பூச்செண்டு தொடர்கதை 3 12 45 யாரோ இவர் இசைவிநோதம 1 மனிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி என் வீருசாமிபிள்ளை நாகஸ்வரம் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 ஆர் வி சுப்பிரமணியசர்மா வீணை 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பரூர் கே ராதாமணி பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 அந்தநாளில் யாத்திரை 8 நாகம்மா கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வாத்யஇசை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 பியானோ வயலின் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் மார்ச் 8

காலை 7 15 கிதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பூவாளூர் சுப்பையா பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வி ஸ்ரீநிவாசன் பாட்டு 8 30 கே வாசுதேவன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே வாசுதேவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே வாசுதேவன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 பவாளூர் சுப்பையா பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பாலக்காடு வி ஆர் மணி ஐயர் வயலின் 7 30 தமிழில் செய்திகள் 7 45 வருங்காலத்தில் கடவுள்வழிபாடு 8 பாலக்காடு வி ஆர் மணிஐயர் வயலின் 8 30 வி ஸ்ரீநிவாசன் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஜெ எம் அப்துல்கனி விதார் ஷேக் தாவூத் தபலா 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

செவ்வாய் மார்ச் 9

காலை 7 15 கிதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி எஸ் சேஷாத்திரி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 டி எஸ் சேஷாத்திரி பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இருகுரலிசை இசைத்தட்டு 7 15 மலைபடுகடாம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மன்னார்குடி ராஜகோபால பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எஸ் ரதன்ஐயர் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 இரு வயலின்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.


## அறிவித்தல்

இதுவரை வண்ணார்பண்ணையில் வசித்த யான், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிரோட் அந்தத்தில் றெயில்வே குட்ஸ்ஷெட்டுக்குப் பின்னால் 133 ம் இலக்கத்தில் உள்ள என்னுடைய நிரந்தரமான வாசஸ்தானத்துக்குப்போய் என் தொழிலை ஆற்றுகிறேன் என்பதை எனது வாடிக்கைக்காரர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

R. பரப்பையா,
கண்வைத்தியர்,
133, ஸ்ரான்லிரோட் (அந்தம்)
யாழ்ப்பாணம்.

Srd. 42 (2-3-48—30-5-48)

## விளம்பரம்

நாவற்குழி வித்தியாசங்கம்
வெள்ளிவிழா பொருட்காட்சி
1918, பங்குனி 25, 26, 27-ம் திகதிகளில் கைதடி ஆங்கில பாடசாலை மைதானம்
விபரம்: காரியதரிசி கைதடி

M 252 5, 9, 12-3-48


# S. S. C. பரீட்சைப் பேறு

1947-ம் ஆண்டு நவம்பர்மாதம் நிகழ்ந்த ஆங்கில S. S. C. பரீட்சையிற் சித்தியடைந்தோர் பெயர் வருமாறு:

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

R V அருணாசலம், C கந்தசாமி, C செல்வரத்தினம், M S வலீல், K ஞானச்சந்திரன் V கந்தையா P கந்தையா P கணபதிப்பிள்ளை R கணேசன் S கதிரமலை M கோபாலசுந்தரம் P கிருஷ்ணபிள்ளை E குருமூர்த்தி K மகேசன் K மகாலிங்கம் A மகேஸ்வரன் மகமத்லைபத் நிரீனு M முருகேசபிள்ளை N நடராசா M நடராசா S நாகராசா M பரமநாதன் C பொன்னம்பலம் E ராசதுரை T சண்முகநாதன் E சங்கரப்பிள்ளை S சச்சிதானந்தசிவம் N சண்முகநாதன் A சின்னத்துரை M சிவகுமாரசூரியர் V துரைசுவாமி V வைத்தியலிங்கம் C வாமதேவ.

#### நாநசித்தியடைந்தோர்

S அரசரத்தினம் R அருளனந்தன் P தேவசேனாபதி R குலசிங்கம் M குணசிங்கம் P மகாராசா I மகேந்திரன் V மகேந்திரன் R மன்னவராயன் S C நடராசா A நடராசா C நடராசா E நாகரத்தினம S நித்தியசிவம் C பத்மநாதன் M பத்மநாதன் S ராசேந்திரம் V ராமச்சந்திர ஐயர் S சத்தியநாதன் R சிவநேசன் P சிவகிருஷ்ணராசா S ஸ்ரீராகவன் P தருமராசா, K தருமலிங்கம், திருநாவக்கரசு, T திருநாமச்சந்திரன், S தியாகராசா, M துரைசிங்கம், C தியாகராசா S வைத்தீஸ்வரன் S விக்கினராசா, K கந்தசாமி, T சுந்தரலிங்கம்.

### யாழ்ப்பாணம் சைவமங்கையர்கலாசாலை

A லீலாவதி, M மகேசுவரி, T மனோன்மணி C சத்தியபாமா, M சரஸ்வதிப்பிள்ளை, P சத்தியவதி, S தனலட்சுமி.

#### நாந சித்தியடைந்தோர்

T ஜெகதீஸ்வரி, T சிவகாமசுந்தரி, S திருப்பதி, M தெய்வநாயகி, மாகதம்—கனகசபாபதி.

### இராமநாதன்கல்லூரி சுன்னாகம்

G அளகரத்தினம், R சின்னையா, S வகாம்பரம், K கனகராசா, N கணபதிப்பிள்ளை R மயில்வாகனம், S W ராசரத்தினம், P இராமலிங்கம், G சபாபதிப்பிள்ளை, J சண்முகம், M சேனாதிராசா K சோமசுந்தரம், T சுப்பிரமணியம், N தம்பையா, N தம்பையா, A தனபாலசிங்கம், Y தியாகராசா, Y தில்லையம்பலம் P துரையப்பா,

#### நாந சித்தியடைந்தோர்

P அம்பலவாணர், P இராசா, V சம்பந்தர், M V சீனிவாசகம், M செல்வத்துரை, P சிவகுரு, M சுப்பிரமணியம்.

### கோக்குவில் இந்துக்கல்லூரி

M கந்தசாமி, S இரத்தினபிரகாசம், R செல்வதுரை A செல்வரத்தினம், K செல்வரத்தினம், S சிவநாயகம், A சுந்தரலிங்கம், N மகேசுவரி, K பர்வதா பத்தினியம்மா, T தன பாக்கிய லட்சுமி, S செல்வநாசகியம்மாள்.

#### நாந சித்தியடைந்தோர்

C கண்ணுதுரை, K கந்தசுவாமி, K கதிர்காமத்தம்பி, S மகேசுவரன், C நடராசா, E பஞ்சலிங்கம், T இராசரத்தினம், R இராசரத்தினம், சண்முகராசா, V N சிதசுப்பிரமணியம், K சுப்பிரமணியம், S ஜீவநாயகி.

### பரமேசுவரக் கல்லூரி

M கறுப்பையா, S கணேசலிங்கம், T கயிலாயர், T கந்தசாமி, V கந்தையா, T கணேசர் R குணசிங்கம், K முருகேசம்பிள்ளை, S நடராசதுரை, S பத்மநாதன் T பரமானந்தன், M இராசேசுவரன், M இராசையா, S இரத்தினம், P சண்முகநாதன், P செல்வத்துரை, S சிவராசசிங்கம், R தவசோதி, T வீரகத்திப்பிள்ளை

#### நாந சித்தியடைந்தோர்

M கந்தையா, P கந்தையா S சுகிரேசம்பிள்ளை, S R குமரேசன், A மகாதேவன், S மாணிக்கவாசகர், S மூத்ததம்பி, R நாகலிங்கம், C பாமநாதன், S இராசரத்தினம், S இராமச்சந்திரன், K இரத்தினசிங்கம், R இரத்தினவேலு, S இரத்தினசபாபதி, J சந்திரசேகரம்பிள்ளை, K. சந்திரசேகரி, V சண்முகசுந்தரம், R சதாசிவம், C தனபாலசிங்கம், P திருச்சிற்றம்பலம், A A துரைராசா, S வரதராசா K விசயத்தினம், P விவேகானந்தன்.

## புகைரத விபத்துக்கள்

சென்ற திங்கட்கிழமை களனிப் பள்ளத்தாக்குப் புகைரதப் பாதையில் ஹோமகனுக்கும் கொட்டாவ என்னுமிடத்துக்கும் இடையிலே ஓர் புகைரத விபத்து ஏற்பட்டது அதன்பயனாக 68 பேர் காயமுற்றனர் அதிஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை.

இன்னோர் புகைரத விபத்து திருக்கோணமலைப் பாதையில் மொரவேவகயத்துக்கும் கெக்கிராவைக்குமிடையில்நிகழ்ந்தது. இதில் எத்தனைபேர் காயமுற்றனர் என்பதுபற்றிய விபரங்கள் இன்னும் வெளிவரவில்லை.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்

## வெளியிட்ட பாலபாடங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| சிறுபிள்ளைப்பாடம் | (சித்திரசகிதமானது) | — 35 |
| முதற் பாலபாடம் | ,, | — 35 |
| இரண்டாம் பாலபாடம் | ,, | — 50 |
| மூன்றும் பாலபாடம் | ,, | — 60 |
| நான்காம் ,, | ,, | — 80 |
| (A) இலக்கியவாசகம் மூன்றும் புத்தகம் | | — 60 |

[நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது; புதுக்கிய இரண்டாம் பதிப்பு: அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு; செய்யுட்பாகம்; பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை, நீதிக்கவித்திரட்டு. (சித்திரமில்லை)

| | | |
|---|---|---|
| ஐந்தாம் பாலபாடம் | ,, | — 80 |

[இரண்டாம் பாலபாடந் தொடக்கம் ஐந்தாம் பாலபாடம் வரையுள்ள நான்கு பாலபாடங்களிலும் முன்னருள்ள பாடங்கள், அரும்பதவிளக்கம் செய்யுட்பாடவுரை என்னு மிவைகளுடன், ஒவ்வொரு பாடங்களின் இறுதியிலும் வினக்கள் இலக்கணக்குறிப்பு அப்பியாசம் என்னுமிவைகளும் புதியனவாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.]

| | | |
|---|---|---|
| ஆறும் பாலபாடம் (புதுக்கியபதிப்பு) | | — 90 |
| ஏழாம் ,, | ,, | — 90 |
| எட்டாம் ,, | ,, | 1 00 |

[இப் பாலபாடங்கள் பத்தும் இலங்கை வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளன; வித்தியாபகுதியாரின் நிபந்தனைகட்கமையத் தொகுக்கப்பெற்றன. தனித்தனி பல பதிப்புக்களையடைந்துள்ளன. உயர்ந்த கிளேஸ் காகிதத்திற் பெரிய அட்சரங்களில் தெளிவுற அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவ வித்தியாசாலைகளிலும் அரசினர்பாடசாலைகளிலும் உவக்கேற்று உபயோகிக்கப்படுவன. எல்லா வகுப்பிலும் சபையார் பாலபாடத்தை உபயோகிக்கும் வித்தியாசாலைகட்கு இந்துசாதனப்பத்திரிகை, பாதிக்கிரயம் மாத்திரம் பெற்றுக்கொண்டு இனமாக அனுப்பப்படுகின்றது]

மனேஜர்.

## விளம்பரம்

ஆச்சாரிஸ் (வரையறுக்கப்பட்டது)
இலங்கையிற் பதியப்பட்டது
அங்கத்தவர்களின் உத்தரவாதம் வரையறுக்கப்பட்டுள்ளது

நிர்வகிக்கப்பட்ட மூலதனம்: ஒரு லட்சம் ரூபா
பங்கு ஒன்று 10 ரூபாவீதம் 10000 பங்குகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.
இப்பொழுது வழங்கப்படும் பங்குகள் 30000 ரூபா மூலதனத்திலிருந்து பகுக்கப்பட்ட தனித்தனி 10 ரூபா கொண்ட 3000 பங்குகளாகும்,

இக்கம்பனியார் நடத்துங் கருமங்கள்:

ஆபரணங்கள் செய்தல், ஆசாங்க கட்டடங்கள் பொருத்தமான முறையில் அமைத்துக் கொடுத்தல், நகை ஈடுபிடித்தல், பொருள்பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்தல், மோட்டர் பகுதிக்குரிய பொருள்கள், மின்சார இயக்கப் பொருள்கள், றலி சைக்கிள்கள் இன்னும் இவைபோன்ற பொருட்களில் வியாபாரம் செய்தல் முதலியனவாம்.

பங்குகளைப் பெற விரும்புவோர் இப்பொழுதே தவறாது பெற்றுக்கொள்ளல்வேண்டும். பத்துப் பங்குகட்குக் குறையப் பங்குகள் ஏற்கப்படமாட்டா.

இக்கம்பெனிக்குரிய விண்ணப்பத்திரமும் பங்குக்காகிய விண்ணப்பப்பத்திரமும், யாழ்ப்பாணம், காங்கேயன்துறை றோட், 213ம் இலக்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

டெலிபோன்: 168. தந்தி: விஸ்வகர்மா

M, 242 20, 27-2-48—5, 1-3-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம்பக்கத் தொடர்ச்சி

பெண்ணையாக ஆணையாகத் தம் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களோ! கன்னன் தன் வரலாற்றை யறியாமல் நித்திய சஞ்சலத்துடன் வாழ்ந்தவாறல்லவா நானுங் காலங்கழிக்க நேர்ந்துவிட்டது. தாய் தந்தையரில் ஒருவராயினும் எனக்குத் துணையாகவிருந்தால் நான் இப்படிக் கலங்கமாட்டேனே! பிள்ளை அதிலும் பெண்பிள்ளை, இந்தப் பிராயத்திலே தாயில்லாமல் எப்படிக் காலம்போக்க முடியும்! அறியாமலா அன்னையில்லாப் பிள்ளை இருப்பது அவம் என்று சொல்லுகிறார்கள். ஐயோ! பொல்லா விதியே! என்பெற்றோர் இறந்துவிட்டனரென்று நான் எண்ணுவதா? இல்லையேற்பிரிந்துவிட்டார்கள்; இனியொருபோது என்னைத் தேடிவரினும்வருவார்களென்று ஒருவாறு மனத்தேற்றியிருப்பதா? என்னைப் பெற்றவர்கள் இன்னமும் உயிருட னிருப்பார்களேயானால், நான் கலங்குவது போலவே, என்னையிட்டு அவர்களுங் கலங்கித் தேடித் திரிவார்கள்; அம்மா, பராசத்தியே, உலக மாதாவே! இதுவும் உன் சோதனையா? நீ படைத்துக் காத்தருளும் அளவில்லாத மக்களுள் நானும் ஒருத்தியல்லவா? இந்த உலக அன்னையர்கள் பிரிந்துவிட உன் பிள்ளைகளெல்லாம் உன்னையல்லவா உலக மாதாவென்று நம்பியிருக்கிறார்கள்; பெற்ற நீயும் பிள்ளையைக் காவாதொழிந்தால் வேறு ஆர்மா காக்கப்போகிறார்கள்......"என்றிப்படியெல்லாம் எண்ணியெண்ணி மனம் புண்ணாகி, அயலிலேயுள்ள ஒரு படுக்கையில் மெல்லப் படுத்து உறங்கிவிட்டாள்.

### "ஊரறிந்த பார்ப்பான்"

இங்ஙனமாக, தம்பதிகள் விஜயரத்தினத்தின் வீட்டிற்கு வந்திருக்கின்றார்களென்பதைக் கேள்வியுற்று, இவர்களுடைய புரோகிதராகிய இராமசாமிஐயர் அங்கே வருதலும், அங்குள்ளா ரெல்லாரும் அவரை வரவேற்று உபசரித்திருத்தினர்; புரோகிதர் தம்மை வந்து வணங்கிய தம்பதிகட்கும், அங்குள்ள ஏனையோர்க்கும் ஆசிசொல்லிக்கொண்டே விபூதி வழங்கிச் சுகம் விசாரித்தார். தனபாக்கியம் அங்கே வாராமைகண்டு பாக்கியலட்சுமி, அவள் கிடக்கும் அறையுட் சென்று "இந்த நேரத்திலும் உறங்கலாமா தங்கைச்சி" என்று சொல்லி யெழுப்பி முகங் கால் கை கழுவச்செய்து புரோகிதர் முன்னிலையிற் கொண்டுவந்து விடுதலும், அவள் அவரைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்து விநயமாக நின்று, அவர் ஆசிசொல்லி வழங்கிய விபூதியைப் பணிவுடன் ஏற்று விதிப்படி பூசினாள்; சற்றுநேரஞ் செல்ல, மற்றையெல்லோரும் தலைவாசற்பக்கத்தைவிட்டுப் போய்விட, சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் மாத்திரம் தலைவாசற்பக்கலில் நிற்க, புரோகிதர் "நான் போய்வர உத்தரவு தருவீர்களா" என்று கேட்டார்; "போய் வரலாம், சாமி, ஆனால் ஒரு சந்தேகத்தைச் சாமியிடங் கேட்டு அறிந்து கொள்ளலாமோ என்று யோசிக்கிறோம்" என்று சிவபாக்கியம் பணிவுடன் கேட்க, "எதனையும் என்னிடம் கூசாமற் கேட்கலாம்" எனப் புரோகிதர் சொன்னார்; "சாமி, எங்கள் தனபாக்கியம் எங்களிடம் வந்த வரலாற்றை முந்தியே உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம், அந்தப் பிள்ளையின் தாய் தகப்பனுடைய பெயரையும், பிள்ளை சொன்னபடி உங்களுக்குச் சொல்லியிருக்கிறோம், நீங்களும் அவ்வூரிலே யிருந்துதானே இங்கு வந்திருக்கிறீர்கள்; ஆனதினால் தனபாக்கியத் தங்கைச்சியின் பெற்றோர் மூதாதையர், அவர்களுடைய மரபு இவைகளைப்பற்றி அறிய விரும்புகிறோம். தெரிந்தாற் சொல்லுங்கள்' என்று விநயத்துடன் வினவினாள் பாக்கியலட்சுமி "நல்லாயறிவேன், இதற்காகவா நீங்கள் யோசிக்கிறீர்கள்; என்னை ஊரறிந்த பார்ப்பானென்றல்லவா எங்கள் சொந்தவூரிலே சொல்லுவார்கள்: அந்தப் பிள்ளையின் முழு வரலாறும் உங்களுக்குந் தெரியுமென்றல்லவா, நான் இதுகாறும் அதைப்பற்றி ஏதுஞ் சொல்லாமல் விட்டேன்; எங்களுடைய மூதாதையரும் நாங்களுந் தாம், அந்த ஊரில் அவர்களுக்குப் புரோகிதர்களாயுள்ளோம்; இந்தப் பிள்ளையின் பெற்றோர் இருமரபுந் தூய வேளாண்குலத்தினர்; தனபாக்கியத்தின் தாய் தகப்பனுக்குக் கல்யாணம் நிகழ்ந்தபோது எங்கள் பெரிய தகப்பனாராம் ஆசாரியராகவிருந்து ஹோமக்கிரியைகள் செய்தவர்... ....' என்று இப்படிப் புரோகிதர் சொல்லும்போது, சிவபாக்கியம் உடனே போய்த் தங்கள் தாயைக் கூட்டிக் கொண்டுவந்து "சுவாமி, எங்கள் தாயாருக்கு இந்தவரலாற்றைத் தயவுசெய்து ஆதியோடந்தமாகச் சொல்லுங்கள்" என்றாள்; புரோகிதர் முழு வரலாற்றையும் சொல்லி, அற்றல் அப்பிள்ளையின் தாய்வழியாருக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் முந்தியே தொடர்பிருக்கிறதென நினைக்கிறேன்' எனச் சொல்லிமுடித்தார் இங்ஙனஞ் சொல்லிவிட்டுப் புரோகிதர் அவர்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்; கேட்ட கண்ணகியம்மையும் மற்றையோரும் அற்புதத்தோடு மகிழ்ச்சியுமடைந்தனர். பின்னர்ச் சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் ஒருங்கு இருக்குஞ்சமயத்திலே கண்ணகியம்மை தனபாக்கியத்தைக் கூப்பிட்டுத் தங்களுடனிருத்தி, புரோகிதர் சொன்ன வரலாறு முழுவதையும் சொல்லி, தான் அறியாமையினால் முந்திச் சொன்னதைப்பற்றி மனம் வருந்தவேண்டாமென்று தனபாக்கியத்திற்குச் சொல்ல, அவளும் மனந்தேறினாள். பின்னருஞ் சிலநாள் அங்கே தங்கியிருந்து நமசிவாயம்சிவபாக்கியம் கண்ணகியம்மை யென்னுமிவர்கள் விஜயரத்தினம் பாக்கியலட்சுமி தனபாக்கிய மென்னுமிவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் பட்டினத்திற்கு மீண்டனர். (வரும்)

## இந்தியாவில் 50 லட்சம் ரூபாய் மோசடி

### சந்தேகத்தின்மீது இலங்கையில் ஒருவர் கைது

கொழும்பு மார்ச் 3—

சென்னையில் 50 லட்சம் ரூபாய் பணமோசடி நடந்திருப்பதன் சம்பந்தமாக இலங்கையில் கந்தசாமிப் பிள்ளை சுப்பையாபிள்ளை என்னும் திருநெல்வேலிக்காரரான ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நேற்று கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் கோட்டில் ஆஜர்செய்யப்பட்டார். இது சம்பந்தமாகச் சென்னையிலும் பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் பிரஸ்தாபநபரை இலங்கை-இந்திய ரகசியப் பொலிஸார் சென்ற நான்கு தினங்களாக தேடிக் கைதுசெய்ததாகவும் கோட்டில் அறிவிக்கப்பட்டது சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் இவரை இந்தியாவுக்கு அனுப்ப வாரண்டு பிறப்பிக்கும் நடவடிக்கை எடுப்பதற்காக 16ந் தேதிவரை ரிமாண்டில் வைத்திருக்கும்படி மஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

## லங்கா ஆயுர்வேத வைத்தியசங்கம்

நிகழும் 1948ம் ஆண்டு மார்ச் மாதம் 10ந் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம், லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்ட மொன்று சமீபத்தில் வெளியான ஆயுர்வேத வைத்தியக்கமிஷன் அறிக்கைபற்றி ஆலோசிப்பதன் பொருட்டுக் கூட்டப்படும்

## ரயில் போக்குவரவு

### கொழும்பு—திரிகோணமலைப் பாதை திருத்தப்பட்டது

கொழும்பு மார்ச் 3

கொழும்பு—திரிகோணமலை ரயில்ப் பாதையில் நேற்று அதிகாலையில் ரயில் தண்டவாளத்தை விட்டு விலகியதால் பாதையில் பலத்த சேதம் ஏற்பட்டிருந்தது இன்று அதிகாலை நான்கு மணிக்கு அப்பாதையால் ரயில் மணிக்கு 4 மைல் வேகத்தில் செல்லக்கூடுமென்று அறிவிக்கப்பட்டது. நேற்று இரவு 8-15 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட இரா றயில் இப்பாதையால் சென்றதெனத் தெரிகிறது.

## மகா சிவராத்திரி உற்சவம்

வண்மேற்குக் காட்டுத்துறை கருணாகர பைரவ பகவதி மாரியம்மன் கோவிலில் மகாசிவராத்திரி புண்ணிய தினத்தன்று (9-3-48) செவ்வாய்க்கிழமை பகல் 4 மணியளவில் விசேஷ அபிஷேகமும் சங்கீதகதாப்பிரசங்கத் திருவிழா என்னுமிவைகளும் நடைபெறுமென அறிகிறோம்.

○

நிகழும் சர்வசித்து வருஷம் மாசி மாதம் உசு-ந் தேதி (9-3-48) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் வேலணை பெருங்குளம்முத்துமாரியம்மன் கோவிலில் விசேஷ அபிஷேகம் நடைபெறும் அதனமேல கோவில் ஈசான திசையில் புதிதாக அமைக்கப்பெற்ற நால்வர் மடாலயத்தில் சிவஸ்ரீ மு. வைரவநாதக் குருக்கள் தலைமையில் இரவு 9 மணி தொடக்கம் சைவ உபந்நியாசக் கூட்டம் நடைபெறுமென திரு வ. க. செல்லப்பா தெரிவிக்கின்றார்.

## காலநிலை

இங்கே இந்நாட்களிற் கடும் வெயிலும் பின்பனியுமுண்டு; இவை காரணமாகப்போலும், மூன்றுநாட் காய்ச்சல், தடிமல் முதலிய நோய்கள் இங்கும் பரவியுள்ளன.

உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

●

அப்படியானால்

●

இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்

## "அப்பா" என்று அழைத்த குழந்தை

### வாய் மூட முடியாமல் உயிர் விட்டது

தனது தந்தையாரின் பிரேதத் தருகே நின்று 'அப்பா' என ஆசையுடன் அழைத்த ஓர் ஒன்றரை வயதுக் குழந்தை அதன் பின் தன்வாயை மூடமுடியாது ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே சிறிது நேரத்தில் தனது உயிரை நீத்த பரிதாப கதை இங்கு பலரிடையேயும் பேசப்படுகிறது.

மேற்படி குழந்தை திரு. அலெக்ஸாண்டர் சுவிர என்னும் உபாத்தியாயரின் 8-வது புதல்வனாவான், திரு. சுவீர காலஞ்சென்ற தினத்தில் இக்குழந்தை அவரது பிரேதத்தருகே சென்று "அப்பா" என்று ஆசையுடன் அழைத்தது. பதிலெதுவும் கிட்டாததால் மீண்டும் இருதடவை "அப்பா, அப்பா" என்றழைத்தது. ஆனால் ஆவி பிரிந்துபோன "அப்பா" எங்ஙனம் பதில் தருவார்?

மூன்றுவது தரம் "அப்பா" என்று அழைத்தபின்னர் குழந்தை வாயை மூடவில்லை. இதன் காரணமாக உடனே குழந்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு எவ்வித முயற்சியும பயனளிக்காமல் குழந்தை இறந்து போய்விட்டது.

தப்பாவும்பிள்ளையும் அடுத்த நாள் ஒரேகுழியிலேயே புதைக்கப்பட்டுள்ளனர்,

## மூன்று குழந்தைகளை ஈன்றாள்

தங்காலையைச் சேர்ந்த தங்கான் வடுவர என்னுங் கிராமத்தில் வசிக்கும் டொருவினுஸ்ஸின கொடிகாரு என்னுமொரு பெண் ஏககாலத்தில் மூன்று குழந்தைகளை உவலாஸ்முல அரசினர் வைத்தியசாலையிற் பிரசவித்தாளெனவும், மூன்று குழந்தைகளும் சுகமேகிடக்கின்றனவெனவும் மூன்று குழந்தைகளையும் வளர்ப்பதற்குத் தனக்குப் பொருளுதவி செய்யும்படி தாயானவள் அரசினருக்கு விண்ணப்பஞ் செய்திருக்கிறாளெனவுந் தெரிவிக்கப்படுகிறது.

உலகம் பலவிதக் கதை I

கோபால — நேசரத்தினம்

இந்துசாதனப் பத்திராசிரியர்

ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியது

படிப்போர்க்கு நல்லறிவைப் புகட்டுவது வாங்கத் தெவிட்டாதது

பிரதிகள் எம்மிடத்திலும், யாழ்ப்பாணம் முதலிய பட்டினங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிலும், கொழும்பு, 28 Upper Chatham Street ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெறற்பாலன.

விலை (1—25) ஒன்றேகால் ரூபா

App'y To Pandit V. T. Sambandhan
Vannarpannai, Jaffna.

Std 41 27- -48 — 27 4-48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டன!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய புதியபாடத் திட்ட

### நாலாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—35

### ஐந்தாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—75

சிறந்த விளக்கமுறைகள்! நிரம்பிய மனக்கணிதப் பயிற்சிகள்!
தெளிவான அப்பியாசங்கள் கொண்டுள்ளன
இரண்டாம், மூன்றும், ஆறுந்தரக் கணிதங்களும்
மனக்கணிதங்களும் (அச்சில்)

PUBLISHERS:
**THE NORTH CEYLON BOOK DEPOT**
POINT PEDRO

Std40 27-2-48 — 26-3 48



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வசீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4 48



## தந்தரோக சஞ்சீவி

**கந்தசாமி வைத்தியர்**

### சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும் வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல், இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30 6.48 (வெ)



## சமயகுரவர்
## சந்தானகுரவர்

[சரித்திரச் சுருக்கம்]

*

இந்துசாதனப் பத்திராசிரியர்
**ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை**
தொகுத்தது

இந்நூல் தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. (S. S. C.) மாணவர்கட்குச் சைவ சமயப் பாடங்களுளொன்றாகவிதிக்கப்பெற்றுளது.

விலை 75 சதம் (12 அணா)

மனேஜர்,
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை.

வண்ணார்பண்ணை,
20—2—48.



## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி,
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலைபை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டிபல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std. 7-8 29 1-8—30-4



## திருக்குறள்: அறத்துப்பால்

(1 38 அதிகாரங்கள்)

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், இந்துசாதனப் பத்திராசிரியர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை வகுத்தது; யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 30வது பிரசுரம்.

விலை ரூபா 1 — 25

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணார்பண்ணை
27-2-48



## நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினாங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம் கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6 47—6-6-48


### வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press V[illegible] Jaffna. on Friday March 5. 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org